# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.16/2025 18.08.2025

அன்பு அருள்பணியாளர்களே! இறைமக்களே!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் ஆசியும் உங்களோடு தங்குவதாக!

இவ்வாண்டு ஜூலை 6ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரை நடைபெற்ற தமிழக ஆயர் பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, திருச்சடங்குகளுக்கான நன்கொடை பெறுவதில் சிறிய மாற்றம் செய்யப்பட்டு, புதிய நன்கொடை விபரம் மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

திருப்பலிக்கான நன்கொடை : ரூ. 150/–

**இத்தொகை கீழ்வரும் விதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது**

| விபரம் | அருள் பணியாளர் | கோவில் | உபதேசியார் / கணக்குப் பிள்ளை | கோவிலார் / மெலிஞ்சி | பாடகர் குழு | பீடப் பூக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| நேர்ச்சைத் திருப்பலி | 100 | 8 | 16 | 14 | 6 | 6 | 150 |

ஒரு திருப்பலியில் ஒன்றுக்கு மேற்பட்ட திருப்பலிக் கருத்துகள் பெற்றால் ஒரு திருப்பலிக்கான நன்கொடை மட்டுமே மேற்கூறிய முறையில் பகிர்ந்தளிக்கப்படும். மீதமுள்ள திருப்பலிக்கான நன்கொடைகள் முழுவதும் ஒவ்வொரு மாதமும் ஆயர் இல்லத்தில் ஒப்படைத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

பங்குத் திருவிழா நாட்களில் நடைபெறும் மாலைத் திருப்பலி பங்கு மக்களின் கருத்துக்களுக்காகப் பொதுவாக ஒப்புக் கொடுக்கப்படும். எனவே, அத்திருப்பலியில் தனி நபர் கருத்துக்களுக்காகத் திருப்பலிக் கருத்துக்கள் பெறுவது தவிர்க்கப்படும்.

இதர வழிபாடுகளுக்காக நன்கொடைகள் கடந்த காலத்தைப் போல எவ்வித மாற்றமுமின்றி கடைபிடிக்கப்படும்.

இந்நடைமுறை 01.09.2025 முதல் கோட்டாறு மறைமாவட்டத்தில் நடைமுறைக்கு வருகிறது.

கிறிஸ்துவின் மனநிலையில்,

Sd/-

**ஆயர் நசரேன் சூசை** (கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு :** இத்தகவல் 24.08.2025 ஞாயிறன்று திருப்பலியின் போது தெரிவிக்கப்பட வேண்டும்.